DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.386/2022**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : கணேசன்
Father/ Husband Name : சுந்தரம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கோவில்பட்டி கிராமத்தில் குடியிருந்து சோலார் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 11.08.2022-ம் தேதி மதியம் 03.30 மணியளவில் மாரியம்மன் கோவில் முன்பாக சிவன் கோவிலில் உள்ள மானியம் தொடர்பாக பேசிக் கொண்டிருந்தோம். எதிரி கோவில் காவல் காரர் எனவே எதிரிக்கு மானியமாக விவசாயம் செய்ய நிலம் கொடுத்திருந்தார்கள். எதிரி காவல் வேலை செய்வதில்லை. அதனால் நான், சாட்சிகள் ஆறுமுகம், நாட்டரசன், லெட்சுமணன் ஆகியோர் சென்று எதிரியிடம் நிலத்தை மீண்டும் கோவிலுக்கு ஒப்படைக்க சொன்னோம். அப்போது எதிரி கோவில் முன்பாக வைத்து என்னை தேவிடியா பயலே என்று அசிங்கமாக பேசினார். பிறகு ஊர்க்காரர்கள் என்னை அழைத்து வந்துவிட்டார்கள். இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் குறிப்பிடும் மானியம் நிலம் எதிரியின் தந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல, பட்டா இல்லை. அ.சா.ஆ.1

புகாரில் கருப்பையா கோவில் நிலத்தை கோவில் காவலாளி என்ற அடிப்படையில் தன் பெயரில் பட்டா மானியமாக பெற்றிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மானிய நிலத்தில் உள்ள மரங்களை கடந்த 02.08.2022-ம் தேதி வேளாங்கண்ணி என்ற 3 லாரிகளில் மரத்தை வெட்டி நானும் சண்முகநாதனும் விற்று விட்டோம் என்றால் நாங்கள் விற்கவில்லை, ஊர் பொதுவில் வைத்து விற்றோம். அவ்வாறு ஊர் பொதுவில் வைத்து மரங்களை விற்கவில்லை என்றும் நானும் சண்முகநாதனும் தான் பண்ணையார் நாட்டாமை என்று சொல்லி பணத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல.

2. மேற்படி மரங்களை விற்றபிறகு எதிரியின் குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதற்கு எதிராக எதிரி தாக்கல் செய்த வழக்கில் உயர்நீதிமன்றத்தில் ஆஜரானோமா என்றால் தெரியாது, இல்லை. இன்று வரை சிவன் கோவில் காவலாளியாக எதிரி குடும்பத்தினர் தான் செயல்பட்டு வருகிறார்கள் என்றால் இல்லை. எதிரியும், நானும் உறவினர்களும் இல்லை, ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்களும் இல்லை. எதிரியின் குடும்பத்தினர் வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் நான் மேற்படி இடத்தில் இனிமேல் எந்தவித அத்துமீறல்களிலும் ஈடுபடமாட்டேன் என்று எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

3. எதிரியின் குடும்பத்தினர் நன்கொடையாக கொடுத்தற்கு கல்வெட்டில் இருந்த அவர்களின் பெயரை நீக்கிவிட்டு அவர்கள் நீதிமன்றம் சென்றதால் திரும்ப எழுதினோம் என்று சொன்னால் நாங்கள் அளிக்கவில்லை, பிரச்சனையாக இருந்ததால் அதற்கு இடம் விட்டு வைத்திந்தோம், நீதிமன்றம் சொன்னபிறகு எழுதிவிட்டோம். ஊரைவிட்டு ஒதுக்கி வைத்திருந்ததால்தான் கல்வெட்டில் பெயர் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னை தேவிடியா பயலே என்று திட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் இடத்திலிருந்த மரங்களை வெட்டி நான் மோசடி செய்ததை மறைப்பதற்காக எதிரி மீது பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** **இல்லை.**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 386/2022**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | |
|---|---|
| Name | : நாட்டரசன் |
| Father/ Husband Name | : சண்முகநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது காரைக்குடியில் குடியிருந்து கார் சர்வீஸ் நிலையம் வைத்துள்ளேன். எனக்கு சொந்த ஊர் கோவில்பட்டி. அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கிராமத்தில் சிவன் கோவிலுக்கு பொதுவான சொத்துகள் இருக்கிறது. அதை அரசு உத்தரவுப்படி அனைவரும் நிலங்களை கோவிலுக்கு திரும்ப ஒப்படைத்தார்கள். ஆனால் எதிரி மட்டும் நிலத்தை திரும்ப ஒப்படைக்கவில்லை. எதிரியின் அப்பா கோவில் ஊழியம் பார்த்தார். அதற்காக அந்த நிலத்தை அவருக்கு கொடுத்திருந்தார்கள். ஆனால் 10-15 வருடங்களாக எதிரியின் குடும்பத்தினர் அந்த ஊழிய வேலைகளை செய்வதில்லை. அதன்பிறகு கிராமத்தார்கள் சம்பவத்திற்கு முன்பு எதிரியிடம் கோவில் நிலத்தை கோவிலிடம் ஒப்படைக்க சொல்லி கேட்டார்கள். இது சம்பந்தமாக கிராமத்தார்கள் தேவஸ்தானத்தில் மனுவும் கொடுத்துள்ளார்கள்.

2. அதனால் எதிரி கோவப்பட்டு 11.08.2022 -ம் தேதி மதியம் 03.00 மணியளவில் கிராம மாரியம்மன் கோவில் அருகில் அ.சா.1ஐ என்னையும், என் தகப்பனாரையும், கிராமத்தாரையும் தேவிடியா பையன் தயிரியமான ஆளா இருந்தா வீட்டுக்குள்ள ஒழிந்திருக்காதா, பொட்டபய என்று அசிங்கமாக திட்டினார். மேலும் எதிரி நாங்கள் அண்ணன், தம்பி 4 பேர் இருக்கிறோம் நீ ஒருஆள்தான் இருக்கிறாய் உன் மகனும் வெளியூரில்தான் இருக்கிறார், நீ

வெளியில் வந்தால் உன் தலையை வெட்டி ஊர் பொதுவில் வைத்துவிடுவேன் என்று எதிரி அ.சா.1ஐ மிரட்டினார். இது சம்பந்தமாக கிராம கூட்டம் போட்டு புகார் கொடுக்க முடிவு செய்து புகாரில் சாட்சி கையெழுத்து போட்டுக் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி அ.சா.ஆ.1 புகாரில் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் ஐ.டி.ஐ படித்துள்ளேன். சிவன் கோவில் சொத்தை எங்கள் குடும்பத்தினர் அனுபவம் செய்தோமா என்றால் ஆமாம் செய்தோம். அதன் சர்வே எண் தெரியாது. நானும் என் குடும்பத்தாரும் சிவன் கோவில் ஊழியம் செய்தோமா என்றால் இல்லை. 3 தலைமுறைகளாக எதிரியின் குடும்பத்தினர்தான் சிவன் கோவிலுக்கு காவல் காரர்கள் என்றால் முதலில் எதிரியின் தந்தையின் பங்காளி பார்த்து வந்தார், அதன்பிறகு எதிரியின் தந்தை பார்த்து வந்தார், தற்போது எதிரியின் தந்தையின் இறப்பிற்கு பிறகு எதிரியின் பங்காளிதான் பார்த்து வருகிறார், அவருடைய இறப்பிற்கு பிறகு தான் எதிரிக்கு வரும்.

2. என் அப்பாவும், கணேசனும் எதிரியின் இடத்தில் உள்ள மரங்களை 02.08.2022-ம் தேதி விற்று விட்டோம் என்றால் சரியல்ல, அந்த இடத்தை வெட்டவில்லை, வேறு பொது இடத்தில் உள்ளதை தான் வெட்டினார்கள். எதிரியின் குடும்பத்தினர் என் தந்தை மீதும், கணேசன் மீதும் 02.08.2022-ம் தேதி மரம் வெட்டியது தொடர்பாக புகார் கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். நானும், எனது குடும்பத்தாரும் எதிரியின் குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்திருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் குடும்பத்தினர் நன்கொடையாக கொடுத்தற்கு கல்வெட்டில் அவர்கள் பெயரை பொறிக்காமல் வைத்திருந்தோம் என்று சொன்னால் பிரச்சனையாக இருந்ததால் அதற்கு இடம் விட்டு வைத்திந்தோம். எதிரி நீதிமன்றம் சென்றபிறகு தான் கல்வெட்டில் அவர்கள் பெயரை சேர்த்தோம் என்றால் சரியல்ல, அவர்கள் நீதிமன்றம் போகவே இல்லை, அதற்கு முன்பே பெயரை சேர்த்துவிட்டோம். இன்றுவரை கோவில் காவல்காரராக எதிரியின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் தான் இருந்துவருகிறார்கள் என்றும் எதிரியின் குடும்பத்தை சேர்ந்த குமரேசன் பணி செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் பணி செய்யவில்லை.

3. நான் போலீசாரின் விசாரணையில் எதிரி நேரில் தேவிடியா பயலே என்று பேசியதாக சொன்னேனா அல்லது கைபேசியில் தேவிடியா பயலே என்று பேசியதாக சொன்னேனா என்றால் முதலில் நேரில் அசிங்கமாக பேசிவிட்டு அதன்பிறகு போனில் பேசினார். எதிரி போனில் யாரிடம் பேசினார் என்றால் கணேசனின் மகன் செந்திலிடம் பேசினார். அவ்வாறு பேசிய உரையாடல்களை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன். நான் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவன் என்பதால் எதிரி மேல் என் அப்பாவும், கணேசனும் அவர்கள் இடத்திலிருந்து மரம் வெட்டியதிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தலையை துண்டித்து விடுவதாக மிரட்டவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 386/2022**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : சண்முகநாதன்
Father/ Husband Name : காளிமுத்து
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.11.2025.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1ஐ எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசிவிட்டார். நான் பிரச்சனை ஏற்படாமல் இருவரையும் தடுத்துவிட்டேன். பிறகு ஊரில் கூட்டம் போட்டு பேசியபோது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்றார்கள். அதனால் புகாரில் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள 4 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி அ.சா.ஆ.1 புகாரில் உள்ள 4 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 18.08.2022-ம் தேதி மதியம் 04.30 மணியளவில் கோவிலுக்கு முன்பாக வேலாயுதப்பட்டிணம் போலீசார் ஒரு சார்பு ஆய்வாளர், 2 போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. அ.சா.2 என் மகன். சம்பவத்தை பற்றி எப்படி தெரியும் என்றால் சத்தம் கேட்டு போய் கேட்டு தெரிந்து கொண்டேன். எதிரி அவருடைய இடத்திலிருந்த மரத்தை

வெட்டியது தொடர்பாக என் மீதும், அ.சா.1 ன் மீதும் வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நானும், கணேசனும் எதிரியின் இடத்திலிருந்து மரங்களை வெட்டி விற்று விட்டோம் என்றால் சரியல்ல, புறம்போக்கு இடத்தில் இருந்ததை தான் வெட்டினோம். நாங்கள் மரத்தை விற்றுவிட்டு தற்போது போலீசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

2. நான் போலீசாரிடம் மாரியம்மன் கோவில் வாசல் முன்பு தான் சம்பவம் நடந்ததாக சொன்னேன். என்னிடம் போலீசார் மாரியம்மன் கோவில் வாசலில் நடந்த சம்பவத்திற்கு தான் படம் வரைந்ததாக சொன்னார்கள். அவ்வாறு மாரியம்மன் கோவில் வாசலில் சம்பவம் நடந்தததாக போலீசார் எந்த மகஜரும் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.